Prepared by : NMMS MOHAN & SASIKALA MOHAN, PUMS, ATHEMCHERI, RAMANATHAPURAM

## கணிதம் - சதவீதமும் தனி வட்டியும் (VII)

51. ஒருவர் ₹6000 ஐ 12% தனிவட்டிவீதத்தில் கடனாகப் பெற்று 73 நாள்களில் கழித்துத் திரும்ப செலுத்தும் போது வட்டியாக எவ்வளவு செலுத்த வேண்டும்?

1. ₹120 2. ₹180 3. ₹164 4. ₹144

52. பின்வருவனவற்றுள் மிகச் சிறியது எது?

1. $\frac{7}{8}$ 2. $15\%$ 3. $1\%$ 4. $0.75$

53. பொருத்துக.

i) $233\frac{1}{3}\%$ - a. $0.25$

ii) $33\frac{1}{2}\%$ - b. $0.23$

iii) பாதியில் பாதி - c. $2\frac{1}{3}$

iv) 23 ல் 1% - d. $0.34$

1. i - b ii - a iii - d iv - b
2. i - c ii - d iii - a iv - b
3. i - b ii - d iii - c iv - a
4. i - c ii - a iii - b iv - d

54. மூன்றாவது எண்ணைவிட இரண்டு எண்கள் முறையே 20% மற்றும் 50% அதிகமாக இருந்தால், இரண்டாவது எண்ணில், முதல் எண் எத்தனை சதவீதம்?

1. 70% 2. 80% 3. 90% 4. 60%

55. ஒரு வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கைக்கும் மாணவிகளின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள விகிதம் 3:2 எனில் மாணவிகளின் எண்ணிக்கையின் சதவீதம் என்ன?

1. 30% 2. 20% 3. 60% 4. 40%

56. 19 இல் 62% + 19 இல் 38% -ன் மதிப்பு ______.

1. 62 2. 19 3. 100 4. 75

LIVEWORKSHEETS

57. 1 நாளில் 36 நிமிடங்களின் சதவீதம் யாது?

1. 25% 2. 3.6% 3. 2.5% 4. 0.25%

58. ஓரு பெரிய சதுரத்தை உருவாக்க சதுரத்தின் அனைத்து பக்கங்களும் 10% நீட்டப்பட்டால், பரப்பளவில் எவ்வளவு சதவீதம் அதிகரிக்கும்?

1. 10% 2. 20% 3. 21% 4. 100%

59. எவ்வளவு தொகை 2 ஆண்டுகளில் 10% தனிவட்டி வீதத்தில் ₹4500 ஆக உயரும்?

1. ₹4000 2. ₹3750 3. ₹3500 4. ₹4250

60. ஒருவர் ₹800 மதிப்புள்ள பொருளை ₹900 க்கு விற்கிறார். பின்பு அதே பொருளை ₹1000 க்குத் திரும்ப வாங்கி ₹1100 க்கு விற்கிறார். எனில் அவருக்குக் கிடைத்த லாபத்தின் சதவீதம் என்ன?

1. 25% 2. 37.5% 3. 22.5% 4. 10%

## அறிவியல் - 18 - உயிரினங்களின் ஒருங்கமைவு

61. உடலில் எந்த ஒரு செல்லாகவும் மாறக்கூடிய சிறப்பு வாய்ந்த செல்கள் ______

(1) நரம்பு (2) இதய (3) மூல (4) எலும்பு

62. ஊடுகலப்பு ஒழுங்கமைவான்களுக்கு உதாரணம் ________.

(1) நன்னீரில் வாழும் மீன்கள் (2) கடல் மீன்கள்

(3) முதுகெலும்பற்றவை (4) இவை அனைத்தும்

63. காற்றில்லா அல்லது ஆக்சிஜனற்ற சூழலில் குளுக்கோஸ் சிதைவடைந்து ____ ஐக் கொடுக்கிறது.

(1) சிட்ரிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம்

(3) லாக்டிக் அமிலம் (4) நைட்ரிக் அமிலம்

64. சவ்வூடு பரவலின்போது கரைசலில் உள்ள கரைப்பான் மூலக்கூறுகள் ______.

(1) செறிவு மிக்க கரைசலிலிருந்து செறிவு குறைவான கரைசலுக்குச் செல்லும்

(2) செறிவு குறைவான கரைசலிலிருந்து செறிவுமிக்க கரைசலுக்கு செல்லும்

LIVEWORKSHEETS

(3) இரு நிகழ்வுகளும் நடைபெறும் (4) கரைசல்கள் கடத்துவது இல்லை

65. மார்பறையையும், வயிற்றறையும் பிரிக்கும் தசை ______.

(1) உதரவிதானம் (2) எலும்பு தசை

(3) இணைப்புத் தசை (4) வரியற்ற தசை

66. உயிரினங்களின் நுண்ணிய நிலையின் மிகச் சிறிய அலகு எது?

(1) அணு (2) செல் (3) திசு (4) மூலக்கூறுகள்

67. தவறானதைக் கண்டறிக:

(1) சுரப்பி எபிதீலியம் ஒரு எளிய திசுவாகும்.

(2) எளிய திசுக்கள் ஒரே வகையான செல்களால் ஆனவை.

(3) திசுக்கள் இரண்டு வகைப்படும்..

(4) வறட்சியான தோலில் உள்ள திசுக்கள் ஒரு எளிய திசுவாகும்.

68. டிரக்கியா என அழைக்கப்படுவது ______.

(1) நுரையீரல் (2) திசு (3) மூச்சுக்குழாய் (4) இதயம்

69. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும்போது, சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவது எது?

(1) என்சைம்கள் (2) இன்சுலின் (3) குளுகோகான் (4) இதயம்

70. கூற்று (A): மைக்கோ பிளாஸ்மா ஒரு யூகேரியாட்டிக் செல் ஆகும்.

காரணம் (R): மைக்கோபிளாஸ்மா ஒரு தெளிவான உட்கரு இல்லை.

(1) A சரி, R தவறு (2) A தவறு, R சரி (3) A சரி, R சரி (4) A, R தவறு

71. கூற்று I: ஐரிஸ் என்பது கண்ணின் நிறமிகளாலான திசு படலமாகும்.

கூற்று II: கண்ணின் உள்ளே நுழையும் ஒளியின் அளவிற்கேற்ப கண் பார்வை அளவைக் கட்டுப்படுத்துகிறது.

(1) கூற்று I தவறு, கூற்று II சரி (2) கூற்று i, II சரி

(3) கூற்று I சரி, கூற்று II தவறு (4) கூற்று I, II தவறு

72. பொருத்துக.

(a) ஊடுகலப்பு ஒத்தமைவான்கள் - (i) பொருள்களை உடைக்கும்

LIVEWORKSHEETS

(b) வளர் மாற்றம் - (ii) நன்னீரில் வாழும் மீன்

(c) ஊடுகலப்பு ஒழுங்கமைவான்கள் - (iii) பொருள்களை உருவாக்கும்

(d) சிதை மாற்றம் - (iv) கடல் வாழ் உயிரினங்கள்

(1) a - (i) b - (iv) c - (ii) d - (iii)    (2) a - (ii) b - (iv) c - (iii) d - (i)

(3) a - (iii) b - (iv) c - (i) d - (ii)    (4) a - (iv) b - (iii) c - (ii) d - (i)

73. நுரையீரலை பாதுகாக்கும் சவ்வு எது?

(1) புளூரா    (2) மைக்ரான்    (3) ஐரிஸ்    (4) கார்னியா

74. ஹைப்பர்டானிக் என்பது _______.

(1) ஒத்த செறிவுக் கரைசல்    (2) மிகை செறிவுக் கரைசல்

(3) குறை செறிவுக் கரைசல்    (4) சம செறிவுக் கரைசல்

75. உட்சுவாசத்தின் போது உதரவிதானம் _______.

(1) விரிவடைகிறது    (2) எந்த மாற்றமும் இல்லை

(3) தளர்ந்து மேற்குவிந்த அமைப்பைப் பெறுகிறது

4) சுருங்கித் தட்டையாகிறது

76. கிரேக்க மொழியில் மெட்டபால் என்பதன் பொருள் யாது?

(1) வளர்ச்சி    (2) ஆற்றல்    (3) மாற்றம்    (4) பரிமாற்றம்

77. மையோப்பியா என்பது _______.

(1) தூரப்பார்வை    (2) கிட்டப்பார்வை    (3) 1, 2 இரண்டும்    (4) சமப்பார்வை

78. கண்ணின் வடிவத்தைப் பராமரிப்பது _______.

(1) ஐரிஸ்    (2) விட்டிரியஸ் திரவம்    (3) அக்குவஸ் திரவம்    (4) லென்சு

79. காற்றுள்ள சுவாசத்தின்போது ஒவ்வொரு குளுக்கோஸ் மூலக்கூறும் உருவாக்கும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை யாது??

(1) 35    (2) 37    (3) 38    (4) 36

80. தன்னிலை காத்தலுக்கு உதாரணம் ________.

(1) இரத்த சர்க்கரையின் அளவு கட்டுபடுத்துதல்

(2) தசைச் செயல்பாடு மற்றும் நடுக்கத்தின்மூலம் வெப்ப உற்பத்தி

LIVEWORKSHEETS

(3) உடல் திரவத்தின் செறிவைக் கட்டுப்படுத்துதல் (4) இவை அனைத்தும்

**சமூக அறிவியல் - இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் (VII)**

81. தவறான இணையைக் கண்டுபிடி.

1. வேளாண் வகை - பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள்
2. பிரம்மதேயம் - பிராமணர்க்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள்
3. சாலபோகம் - கல்வி நிலையங்களைப் பராமரிப்பதற்காக வழங்கப்பட்ட நிலங்கள்
4. தேவதானம் - சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள்

82. பொருத்துக.

i. கஜுராஹோ கோயில் - a. ஒடிசா
ii. அபு குன்று - b. தமிழ்நாடு
iii. கோனார்க் கோயில் - c. தில்வாரா
iv. பிரகதீஸ்வரர் கோயில் - d. மத்தியப்பிரதேசம்

1. i - d ii - c iii - b iv - a
2. i - a ii - d iii - b iv - c
3. i - d ii - c iii - a iv - b
4. i - d ii - a iii - b iv - c

83. ஒரு வெள்ளி டங்காவுக்குச் சமமானது _______ ஜிட்டல்கள் ஆகும்.

1. 36
2. 42
3. 56
4. 48

84. பொருத்துக.

i. மின்கஜ் உஸ் சிராஜ் - a. தாரிக்-இ-பெரிஷ்டா
ii. ஹசன் நிஜாமி - b. தாரிக்-இ-பிரோஷாகி
iii. ஜியா-உத்-பரணி - c. தபகத்-இ-நஸிரி
iv. பெரிஷ்டா - d. தாஜ்-உல்-மா-அசிர்

1. i - c ii - d iii - b iv - a
2. i - d ii - c iii - a iv - b
3. i - c ii - a iii - b iv - d
4. i - c ii - d iii - a iv - b

LIVEWORKSHEETS

85. இபன் பதூதாவின் பயண நூல் _______.

1. ரிக்ளா 2. தாகுயூக்-இ-ஹிந்த் 3. மதுரா விஜயம் 4. ராஜதரங்கிணி

86. 1420- இல் விஜயநகர் வந்த இத்தாலியப் பயணி _______.

1. நிகோலோ கோண்டி 2. இபன் பதூதா 3. அல்-பரூனி 4. பதானி

87. பொருந்தாததைத் தேற்ந்தெடு

1. ஜெய்சால்மர் 2. ஹம்பி 3. ஜோத்பூர் 4. ஜெய்ப்பூர்

88. "தபகத்" என்ற சொல்லின் பொருள் _______.

1. வரலாறு 2. நூற்றாண்டு 3. சுய சரிதை 4. உண்மைகள்

89. நாணயங்கள் மூலம் நாம் அறிந்து கொள்வது _______.

1. இராணுவப் படையெடுப்புகள் 2. வணிகத் தொடர்பு

3. சமய நம்பிக்கைகள் 4. இவை அனைத்தும்

90. பின்வருவனவற்றுள் கிருஷ்ண தேவராயருடன் தொடர்புடையது எது?

1. பிருதிவிராஜ ரசோ 2. மதுரா விஜயம்

3. ராஜ தரங்கிணி 4. அமுக்தமால்யதா

## 4. இடம் பெயர்தல் மற்றும் நகரமயமாதல் (VIII)

91. சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை 2017 ஆம் ஆண்டின் படி சர்வதேச அளவில் புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை எங்கு அதிகம் உள்ளது?

1. ஆப்பிரிக்கா 2. ஐரோப்பா 3. ஆசியா 4. ஆஸ்திரேலியா

92. _______ ஆம் ஆண்டு வரலாற்றில் முதன்முறையாக உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகை ஊரக மக்கள் தொகையை விட அதிகரித்தது.

1. 2003 2. 2005 3. 2007 4. 2009

93. உலகில் மக்கள் தொகை அதிகம் உள்ள கண்டம் எது?

1. ஆசியா 2. ஆப்பிரிக்கா 3. ஐரோப்பா 4. வட அமெரிக்கா

94. உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் மாநகரம் எது?

1. புதுடில்லி 2. டோக்கியோ 3. சாங்காய் 4. மெக்சிகோ

LIVEWORKSHEETS

95. ஐ நா சபையின் சர்வதேச இடம்பெயர்வு அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டு?

1. 2018 2. 2015 3. 2016 4. 2017

96. உலக நகரமயமாக்கல் விளக்கக் குறிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு எது?

1. 2014 2. 2012 3. 2017 4. 2015

97. பண்டைய காலத்தில் நகர்ப்புற மையங்களின் அளவு மற்றும் எண்ணிக்கை யாருடைய பெரும் காலனியாதிக்க காலங்களில் அதிகரிக்கத் தொடங்கியது?

1. கிரேக்கர்கள் 2. ரோமானியர்கள் 3. (1) மற்றும் (2) 4. எதுவுமில்லை

98. 2050 இல் நகர மக்கள் தொகை எத்தனை சதவீதம் உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது?

1. 80 2. 60 3. 68 4. 75

99. _______ என்பது கிராமப்புற பகுதிகளில் செயல்படும் முக்கிய உந்துக் காரணியாகும்.

1. வேலைவாய்ப்பின்மை 2. மக்கள் தொகை பெருக்கம்

3. விவசாயமின்மை 4. மழையின்மை

100. கூற்று: அறிவார்ந்த மக்கள் வெளியேறுதல் என்பது பின்தங்கிய நாடுகளை சார்ந்த தொழிற்திறன் கொண்ட மக்கள் சிறந்த வேலை வாய்ப்புகளை தேடி வளர்ந்த நாடுகளுக்கு செல்கின்றனர்

விளைவு: பூர்வீக பகுதிகள் பின்தங்கிய நிலையை அடைகின்றன.

1. கூற்று சரி ஆனால் விளைவு தவறு

2. கூற்று தவறு ஆனால் விளைவு சரி

3. கூற்று மற்றும் விளைவு இரண்டுமே சரி

4. கூற்று மற்றும் விளைவு இரண்டுமே தவறு

**Compiled by**

**Mr.N.Chinnannan** (Maths), PUMS, K.Pallipatti, Salem District.

**NMMS.Mohan** (Science), PUMS, Athemcheri, Ramanathapuram District.

**Mrs.B.Usha Anandhi** (Social Science), GHS, Keezhkumaramangalam, Cuddalore District.

**Live Worksheets Created by Mr.P.Prabath B.T.Asst(Maths), PUMS, Komaliyur, Salem District**

LIVEWORKSHEETS